# மாற்றுப் பராமரிப்பு முறைகள்

குழந்தையைத் தத்தெடுத்தல் • மாற்றுக் குடும்ப முறை

## கேள்விகளும் – பதில்களும்

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | குழந்தையைத் தத்தெடுத்தல்<br>கேள்விகளும் - பதில்களும் |
| முதல் பதிப்பு | : | டிசம்பர் 2019 |
| உறுதுணை | : | சமூகப் பாதுகாப்புத் துறை, தமிழ் நாடு<br>யுனிசெ∴ப், தமிழ் நாடு |
| நூலாக்கம் | : | திருமதி. கிரிஜா குமார்பாபு,<br>கௌரவ பொது செயலாளர்<br>இ.கு.ந. சங்கம், தமிழ் நாடு |
| | | திருமதி. அ. சரஸ்வதி<br>முதல்வர் - பயிற்சி பிரிவு,<br>இ.கு.ந. சங்கம், தமிழ் நாடு |
| | | திரு. ஜி. குமரேசன்<br>சோஷியல் பாலிசி ஸ்பெஷலிஸ்ட்,<br>யுனிசெ∴ப், தமிழ் நாடு & கேரளா |
| திட்ட மேலாண்மை | : | டாக்டர். இரா. ஐஸ்வர்யா<br>திட்ட மேலாளர், மாடல் பிராஜக்ட் ∴பார் ஆல்டர்நேடிவ் கேர்,<br>இ.கு.ந. சங்கம், தமிழ் நாடு |
| கணினியாளர் | : | செல்வி. பு. மேனகா<br>இ.கு.ந. சங்கம், தமிழ் நாடு |
| வடிவமைப்பு | : | பி.எஸ்.எஸ். ராவ்<br>ஸ்பெக்ட்ரம் கிரா∴பிக்ஸ், சென்னை |
| அச்சகம் | : | சாய் பாண்ட் பிரின்ட் சிஸ்டம்ஸ், சென்னை |

# அறிமுகம் :-

குழந்தையைத் தத்தெடுத்தல் என்பது காலம்காலமாக நம்மிடையே இருந்து வரும் பழக்கமாகும். குழந்தைகளற்ற தம்பதியினா் மனமொத்து வேறு ஒரு குழந்தையை தம்முடைய குழந்தையாக சட்டரீதியாக ஏற்றுக்கொள்வதுதான் குழந்தையைத் தத்தெடுத்தல் ஆகும். ஆயினும் இந்த முடிவு பெற்றோர்களுக்குக் குழந்தை வேண்டும் (அ) குழந்தைபேறு கிடைக்காதவர்கள் என்ற சமுதாய பின்னடைவிலிருந்து வெளியே வரவேண்டும் (அ) சொத்துக்கு வாரிசுதாரர் வேண்டும் என்பதன் அடிப்படையில் நிகழ்ந்தது. குழந்தையைத் தத்தெடுத்தல் இவ்வாறு பெரியவர்களுடைய தேவையை மையப்படுத்தியே இருந்தது. இதன் அடிப்படையில், பொதுவாக குடும்பத்திற்குள்ளேயே ஏதாவது ஒரு உறவினரிடமிருந்து குழந்தையைத் தத்தெடுத்துக் கொண்டார்கள். இது கலாச்சார ரீதியாகவும், சட்டரீதியாகவும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட செயல்பாடு ஆகும். ஆயினும் தற்பொழுது ஆதரவற்ற, அனாதையாக்கப்பட்ட குழந்தைகளுக்கு ஒரு குடும்பத்தை ஏற்படுத்தி தர வேண்டும் என்றும், அக்குடும்பத்தின் தாய், தந்தை மற்றும் உறவினரின் அன்போடு, ஆதரவோடு அனைத்து குழந்தைகளுக்கும் குடும்பத்தில் வளருவதற்கு உரிமை உள்ளது என்ற புரிதலின் அடிப்படையிலும் தத்தெடுத்தல் ஒரு சிறந்த குழந்தைப் பாதுகாப்பு முறையாக கருதப்படுகிறது.

பல வருடங்களாக இந்தியாவில் இந்துக்கள் மட்டுமே சட்டரீதியாக தத்தெடுக்க முடியும்; பிறமதத்தை சார்ந்தவர்கள் (கிறிஸ்துவர்கள், முஸ்லீம்கள், பார்சி போன்ற இனத்தவர்கள்) விருப்பப்பட்டாலும் சட்டப்படி தத்தெடுக்க முடியாது என்னும் ஒரு நிலைப்பாடு இருந்து வந்தது. இதற்கு முக்கிய காரணம், அனைத்து மதத்தினருக்கும் பொருந்தக்கூடிய தத்தெடுப்பு சட்டம் இல்லாமல் இருந்ததே. அதனால் பொதுவாக பிறமதத்தை சார்ந்தவர்கள், “பாதுகாவலா் மற்றும் பாதுகாக்கப்படுவோா் சட்டம் 1890”இன் (Guardian and Wards Act of 1890) அடிப்படையில் குழந்தைகளை தங்களுடைய பாதுகாப்பில் குடும்பத்திற்கு அழைத்து சென்றார்கள். 2015ஆம் ஆண்டு இளைஞர் நீதிச் (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் மத்திய அரசால் கொண்டுவரப்பட்டது. இச்சட்டத்தின் அடிப்படையில் எந்த மதத்தினராக இருந்தாலும் குழந்தைகளை தத்தெடுக்க முடியும். இதன் காரணமாகவே இச்சட்டம் ஒரு சிறந்தக் குழந்தைப் பாதுகாப்பு உரிமை சார்ந்த சட்டமாகும்.

தத்தெடுத்தலை ஊக்குவிக்கவும், முறைப்படுத்தவும் மத்திய அரசு www.cara.nic.in என்ற வலைதளத்தை ஏற்படுத்தியுள்ளது. தற்பொழுது அனைத்து தத்தெடுப்புகளும் இந்த வலைத்தள அமைப்பின் வழியாகத்தான் செய்ய இயலும். தத்தெடுத்தலுக்கான செய்திகள், தகவல்கள் ஆகியவற்றை இந்த வலைதளப் பகுதியில் பார்க்கலாம்.

மகப்பேறு இல்லையே என்று கவலைப்படுபவர்கள் தனது வாழ்க்கையை மகிழ்ச்சிகரமாக மாற்றிக்கொள்வதற்கும், உணர்வு ரீதியாக ஒரு குழந்தைக்கு பெற்றோர் கிடைக்கப் பெறுவதற்கும், முறையாக ஒரு குழந்தையைத் தத்தெடுத்தலே ஒரு சிறந்த வழியாகும்.

பின்வரும் பக்கங்களில் தத்தெடுக்கத் தயாராகும் பெற்றோருக்கு எம்மாதிரியான செய்திகள் அல்லது குறிப்புகள் தெரிந்திருக்க வேண்டும் என்பதன் அடிப்படையில் “குழந்தையைத் தத்தெடுத்தல் கேள்விகளும் - பதில்களும்” என்ற தலைப்பில் செய்தித் தொகுப்பாக கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த கேள்விகள் பெற்றோர்களுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்ற அடிப்படையில் அமைக்கப்பட்டு இருந்தாலும், தத்தெடுப்பதில் பங்கு பெறும் பிற அலுவலர்களான குழந்தை நலக் குழு உறுப்பினர்கள், மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு அலுவலா், குழந்தைப் பாதுகாப்பு

அலகில் பணிபுரியும் சமூக பணியாளர் சிறப்பு தத்தெடுப்பு முகமை போன்ற அனைவருக்கும் குழந்தையைத் தத்தெடுத்தல் முறை குறித்த ஒரு விளக்கமாக அமையும்.

குறிப்பாக குழந்தை நலக் குழு உறுப்பினர்களை மூன்று வருடத்திற்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று இளைஞர் நீதிச் (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015 கூறுகிறது. எனவே மூன்று வருடத்திற்கு ஒரு முறை புதிதாக பதவி ஏற்கும் குழந்தை நலக் குழுவின் உறுப்பினர்களுக்கு இந்த தொகுப்பானது தேவையான தகவல்களை கொடுக்கக்கூடிய செய்தி தொகுப்பாக அமையும்.

இந்த செய்தி தொகுப்பில் கூறப்பட்டுள்ள விவரங்கள் தத்தெடுக்க விரும்பும் இந்தியர்களுக்கு மட்டுமே பொருந்தும். அயல்நாட்டில் வாழும் இந்தியர்கள், அல்லது அயல்நாட்டை சேர்ந்தவர்கள் தத்தெடுக்க விரும்பினால் அதற்கான விதிகள் வேறு என்பதனால் அவற்றைப்பற்றி இப்பகுதியில் கூறவில்லை.

## 1. குழந்தையை யார் தத்தெடுக்கலாம்?

மகப்பேறு கிடைக்கப்பெறாதவர்களும், தனக்கென குழந்தை இருந்தும் சமுதாயத்திற்கு தன்னுடைய பங்களிப்பை தரவேண்டும் என்ற நல்ல உள்ளத்தவர்களும் குழந்தையைத் தத்தெடுக்கலாம்.

## 2. குழந்தையை தத்தெடுக்க விரும்பும் பெற்றோருக்கான தகுதிகள் என்ன?

தத்தெடுக்க விரும்பும் பெற்றோர் திருமணமாகி குறைந்தபட்சம் இரண்டு வருடங்கள் முடிந்தவராய் இருத்தல் வேண்டும். மேலும் அவர்கள் 25 வயதுக்கு மேற்பட்டவராகவும் 55 வயதுக்கு உட்பட்டவராகவும், ஆரோக்கியமானவராகவும் இருத்தல் வேண்டும்.

## 3. பிறந்த குழந்தையை தத்தெடுக்க முடியுமா?

வாய்ப்பு இல்லை. குறைந்த பட்சம் பிறந்து மூன்று மாதத்திற்கு மேற்பட்ட குழந்தைகளையே தத்தெடுக்க இயலும்.

## 4. இதற்கு என்ன காரணம்?

ஒரு ஒப்படைக்கப்பட்ட (Surrendered) அல்லது கைவிடப்பட்ட (Abandoned) குழந்தையை சட்டரீதியாக தத்து கொடுக்க தகுதியான குழந்தை என சான்றிதழ் வழங்க குறைந்தபட்சம் மூன்று மாத காலம் தேவைப்படும்.

## 5. தத்தெடுக்க விரும்பும் பெற்றோருக்கு வயது என்ன இருக்க வேண்டும்?

25 வயதிற்கு மேல் 55 வயதுக்குள் இருக்க வேண்டும். இருவரின் இணைந்த வயது 90க்குள் இருக்க வேண்டும்.

## 6. தனிநபரால் தத்தெடுக்க முடியுமா?

ஆம். முடியும்.

## 7. இது குறித்து ஏதேனும் விதிகள் உள்ளனவா?

திருமணம் ஆகாதவர், அல்லது சட்டப்படி விவாகரத்து பெற்றவர் அல்லது கணவன் அல்லது மனைவியை இழந்த தனிநபர்கள், ஆகியோர் சட்டப்படி ஒரு குழந்தையை தத்தெடுக்க இயலும்.

திருமணமான நபர்கள், தங்களது வாழ்க்கைத் துணையின் (கணவன்/மனைவி) சம்மதமின்றி, தனிப்பட்ட முறையில் தத்தெடுக்க இயலாது.

## 8. குழந்தை எந்த பாலினமாக இருந்தாலும் தனிநபரால் தத்தெடுக்க முடியுமா?

தத்தெடுக்கும் தனிநபர் ஒரு பெண்ணாக இருக்கும்பட்சத்தில், ஆண் அல்லது பெண் ஆகிய எந்த பாலினத்தைச் சேர்ந்த குழந்தையாக இருப்பினும் தத்தெடுக்க அனுமதியுண்டு.

ஆனால் தத்தெடுக்கும் தனிநபர் ஆணாக இருப்பின், ஆண் குழந்தைகளை மட்டுமே தத்தெடுக்க இயலும். ஒரு பெண் குழந்தையை தத்தெடுக்க அனுமதி இல்லை.

## 9. ஏற்கனவே சொந்த குழந்தை இருப்பின் அவர்களாலும் தத்தெடுக்க முடியுமா?

முடியும். அவர்களுக்கு குழந்தைகள் இருந்தாலும் தத்தெடுக்க வேண்டும் என நினைப்பவர்கள் தத்தெடுக்கலாம்.

தற்பொழுது உள்ள சூழலில் வித்தியாசமாக சமுதாயத்திற்கு பங்களிக்க வேண்டும் என உள்ளவர்கள் அல்லது குழந்தை நலனில் ஈடுபாடு உள்ளவர்கள் மட்டுமே குழந்தை இல்லங்களிலிருந்து ஒரு குழந்தையை தத்தெடுக்க விரும்புகிறார்கள்.

ஒன்று அல்லது இரண்டு குழந்தைகள் உள்ள பெற்றோர், மற்றொரு குழந்தையை தத்தெடுக்க விரும்பினால் அனுமதி அளிக்கப்படும். ஆனால் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகள் உள்ள பெற்றோருக்குப் பொதுவாக தத்தெடுக்க அனுமதி கொடுப்பது இல்லை. ஆனால் அவர்களே உடல்/மனநல பாதிப்புள்ள அல்லது மாற்றுதிறனாளியான ஒரு குழந்தையை தத்தெடுக்க விரும்பினால் அதற்கு அனுமதி அளிக்கப்படும்.

## 10. இயற்கை பெற்றோர்களுக்கு குழந்தை இருப்பின் அதே பாலினத்தை சேர்ந்த மற்றொரு குழந்தையைத் தத்தெடுக்கலாமா?

இளைஞர் நீதிச் (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம்-2015ன்படி பெண் குழந்தை இருந்தாலும், பெண் குழந்தையை தத்தெடுக்கலாம். ஆண் குழந்தை இருந்தாலும் ஆண் குழந்தையை தத்தெடுக்கலாம்.

ஆனால், “இந்து தத்தெடுப்பு மற்றும் பராமரிப்பு சட்டம் 1956யின்” கீழ் ஒருவருக்கு ஆண் குழந்தை இருப்பின் மற்றொரு ஆண் குழந்தையை தத்தெடுக்க இயலாது. ஒரு பெண் குழந்தையை வேண்டுமானால் தத்தெடுக்கலாம். அதேபோல் ஒருவருக்கு பெண் குழந்தை இருப்பின் ஆண் குழந்தையை மட்டுமே தத்தெடுக்க அனுமதி உண்டு.

## 11. ஐம்பது (50) வயது முடிந்துள்ள பெற்றோர், கைக்குழந்தையை தத்து எடுக்க முடியுமா?

ஒரு வயது பூர்த்தியாகாத சிசுவையும், மூன்று வயதிற்குள் உள்ள சிறிய குழந்தைகளை தத்தெடுக்கக்கூடாது என்று எந்த விதியும் இல்லை. ஆனால் முதுமையின் ஆரம்பத்தில் உள்ளவர்கள் சிறிய கைக்குழந்தையை தத்தெடுக்கும்பொழுது, அவர்களால் அக்குழந்தையை பார்த்துக்கொள்வது கடினமாக இருக்கும். ஒருவேளை உடல்நலம் ஒத்துழைக்காமலும் இருக்கலாம்.

- கைக்குழந்தையை தத்தெடுக்க விரும்பும் பெற்றோரின் கூட்டு வயது அதிகபட்சம் 90 ஆக இருத்தல் வேண்டும்.
- தனிநபர் 25 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்குள்ளாகவும் இருக்க வேண்டும். இவர்கள் பிறந்ததிலிருந்து 4 வயது வரையுள்ள குழந்தையைத் தத்தெடுக்கலாம்.
- 4 முதல் 8 வயது குழந்தையை தத்தெடுக்க விரும்புவோரின் அதிகபட்ச கூட்டு வயது 100 ஆக இருக்க வேண்டும். தனி நபர் 50 வயது மிகாமல் இருக்க வேண்டும்.
- 8 முதல் 18 வயது குழந்தையை தத்தெடுக்க அதிகபட்ச கூட்டு வயது 110 ஆக இருக்க வேண்டும். தனி நபர் 55 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

## 12. தத்தெடுக்கும் பெற்றோர் செய்யவேண்டிய முதல் வேலை என்ன?

- ஒரு குழந்தையை தத்தெடுக்க முதலில் www.cara.nic.in என்னும் வலைதளத்தில் பதிவு செய்தல் வேண்டும்.
- நான்கு வாரத்திற்குள் கோரப்பட்ட சான்றிதழ்கள் அனைத்தும் பதிவேற்றம் செய்தல் வேண்டும்.
- விண்ணப்ப பதிவு முடிந்தவுடன் அவர்களது பதிவெண் அனுப்பப்படும். அந்த பதிவு எண்ணை பயன்படுத்தி, வரிசை பட்டியலில் அவர்களது பதிவெண் எங்குள்ளது என்பதை கண்காணித்து வரலாம்.

## 13. இணையதளத்தில் பதிவு செய்தவுடன் குழந்தை கிடைக்குமா?

- கிடைக்காது. விண்ணப்பிக்கும் பெற்றோரின் விவரங்கள் ஏற்கனவே www.cara.nic.in பதிவு செய்த பெற்றோர்களின் வரிசைப் பட்டியலில் இணைக்கப்படும்.

## 14. இணையதளத்தில் பதிவு செய்தவுடன் எடுக்கும் செயல்பாடுகள் என்ன?

- சம்பந்தப்பட்ட நிறுவனத்தால் இல்ல ஆய்வு மேற்கொள்ளுதல் (Home Study Report)
- இல்ல ஆய்வுக்கு பிறகு தேவையான தரவுகள் முழுமையாக கொடுத்த பின்னரே விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும்.
- குழந்தை ஒத்திசைவு மூலம் குழந்தைகளை பெற்றோர்களோடு இணைப்பார்கள் (Reserving the referral).
- அதன் பிறகு விண்ணப்பத்தின் மூப்பு அடிப்படையில், குழந்தையின் புகைப்படம் தேர்வு செய்து பெற்றோருக்கு அனுப்பப்படும். இதற்கு பல மாதங்கள் கூட ஆகலாம்.
- அவ்விதம் அனுப்பப்பட்ட குழந்தையின் புகைப்படம், பெற்றோர்களுக்கு பிடித்திருக்கும்பட்சத்தில், 20 நாட்களுக்குள் அந்த பெற்றோர் குழந்தை இருக்கும் இல்லத்திற்கு சென்று குழந்தையைத் தத்தெடுக்க ஒப்புதல் கையொப்பமிட்ட பின்னர் தற்காலிகமாக குழந்தைப் பெற்றோரிடம் ஒப்படைக்கப்படும்.

## 15. தத்தெடுக்கும் பெற்றோர் / தனிநபர் நேரில் சென்று குழந்தையை பார்த்து எடுக்கலாமா?

பார்க்கலாம், ஆனால் அதற்கு சில விதிமுறைகள் உண்டு.

கோரப்பட்ட விண்ணப்பத்தின் அடிப்படையில் ஒரு குழந்தையின் புகைப்படம் மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படும்.

குழந்தையின் பின்னணி, மருத்துவ சான்றிதழ் ஆகியவை மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படும்.

குழந்தையை தத்தெடுக்க விரும்பினால் 48 மணி நேரத்திற்குள் ஒப்புதல் தெரிவித்தல் வேண்டும்.

குழந்தையின் புகைப்படம் அனுப்பப்பட்ட நாளிலிருந்து விரும்பினால் 20 நாட்களுக்குள் நேரில் சென்று குழந்தையைப் பார்க்க அனுமதியுண்டு.

## 16. தத்தெடுக்கும் பெற்றோர் / தனிநபர் எப்பொழுது எழுத்து மூலம் ஒப்புதல் அளிக்க வேண்டும்?

குழந்தையை நேரில் சென்று பார்த்த பிறகே எழுத்து மூலம் ஒப்புதல் அளிக்க வேண்டும்.

## 17. குழந்தையை தத்தெடுப்பதற்கு நீதிமன்றம் வழியாக என்ன செயல்பாடுகள் மேற்கொள்ள வேண்டும்?

இணையதள செயல்பாடுகள் முடிந்து தற்காலிகமாக குழந்தையை பெற்றோரிடம் ஒப்படைத்த பின்னர், குழந்தையை பராமரிப்பில் வைத்திருந்த சிறப்பு தத்தெடுப்பு முகமை (Specialized Adoption Agency – SAA) பெற்றோரின் சார்பாக நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்யவேண்டும்.

## 18. நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்த பின் எவ்வளவு நாட்களுக்குள் நீதிமன்ற ஆணை கிடைக்கும்?

நீதிமன்ற ஆணை இரண்டு மாதத்திற்குள் கிடைக்க வாய்ப்புண்டு. குழந்தையை தத்து கொடுப்பதற்கான ஆணை கிடைத்தவுடன் அவர்கள் சட்டரீதியான தத்து பெற்றோர் ஆவார்கள்.

## 19. தத்தெடுத்த பெற்றோரின் பெயர்களுடன் குழந்தைக்கு பிறப்பு சான்றிதழ் எவ்வாறு கிடைக்கும்?

தத்தெடுத்த பெற்றோர்களுக்கு, சட்டரீதியாக கொடுக்கபடும் நீதிமன்ற ஆணையில் இத்தகவல்கள் அடங்கியிருக்கும். இந்த ஆணையின் அடிப்படையில் பிறப்பு சான்றிதழ் கிடைக்கும்.

## 20. கல்வி தகுதி அதிகம் இல்லாத பெற்றோர் யாருடைய உதவியுடன் பதிவு செய்யலாம்?

மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு அல்லது மாநில தத்து வள ஆதாரமையம் அவர்களின் உதவியுடன் பதிவு செய்யலாம்.

## 21. கல்வித் தகுதி இல்லை, சொத்து இல்லை, குழந்தையை தத்தெடுக்க முடியுமா?

ஒரு குழந்தையை நன்கு வளர்க்க போதுமான வசதி வாய்ப்புகள் இருத்தல் அவசியம். ஆனால் கல்வித் தகுதி கட்டாயம் என்பது இல்லை.

## 22. குழந்தையை சட்ட ரீதியாக தத்து எடுக்கும் முறை எவ்வளவு நாட்களுக்குள் முழுமை பெறும்?

காலத்தை வரையறுக்க முடியாது. ஏனெனில் தத்துக்கு வரக்கூடிய குழந்தைகளின் எண்ணிக்கை பொறுத்தே காலம் அமையும்.

குழந்தையை இணையதளத்தில் பொருத்தம் செய்தபின், சட்டப்படி குழந்தையை தத்து கொடுக்க குறைந்தபட்சம் 3 முதல் 6 மாதங்கள் ஆகும்.

*எ.கா. : பத்து மாத காத்திருப்பிற்கு பின்னரே ஒரு குழந்தையை ஈன்றெடுக்க இயலும். இந்த கண்ணோட்டத்தின் வழியாக பார்த்தால் குழந்தையை பெறுவதற்கு 10 மாத கால காத்திருப்பிற்க்கு கட்டாயம் தேவை.*

## 23. எந்த மாநிலத்திலிருந்தும் குழந்தையை தத்தெடுக்க இயலுமா?

இந்தியாவில் உள்ள எந்த மாநிலத்திலிருந்தும் குழந்தையை தத்தெடுக்க இயலும். இணையதளத்தில் பதிவு செய்யும் போது மூன்று மாநிலங்களை தத்து பெற்றோர் விருப்ப அடிப்படையில் தேர்வு செய்ய வேண்டும்.

## 24. குழந்தையைத் தத்தெடுப்பதற்கு காலவரையறை இருக்கிறதா?

குழந்தையின் புகைப்படம் கிடைத்த பின்னர் 48 மணி நேரத்திற்குள் ஒப்புதலை இணையதளத்தின் மூலம் அளிக்க வேண்டும். பின்னர் 20 நாட்களுக்குள் குழந்தையை சட்டப்படி தத்தெடுக்க உறுதி செய்ய வேண்டும்.

## 25. குழந்தையின் பாலினத்தை விருப்பத்தின் அடிப்படையில் தேர்வு செய்யலாமா?

தேர்வு செய்யலாம். பதிவு செய்யும் போது பாலினத்தை குறிப்பிட வேண்டும். இருப்பினும் ஆண்/பெண் எவராகவும் இருக்கலாம் என்று பதிவு செய்யும் போது, விரைவில் குழந்தை கிடைக்க வாய்ப்புகள் அதிகம்.

## 26. எத்தகைய குழந்தை வேண்டும் என்பதனைத் தெரிவிக்கலாமா?

நிச்சயம் தெரிவிக்கலாம். இணையதளத்தில் பதிவு செய்யும் போதே தத்து எடுக்க விரும்பும் பெற்றோர் தங்கள் விருப்பத்தை தெரிவிக்கலாம். அதாவது ஆண் குழந்தை அல்லது பெண் குழந்தை, வயது,

உடல் தகுதி, எந்த மாநிலத்தைச் சேர்ந்த குழந்தை வேண்டும் என்ற விவரங்களை தெரிவிக்க வேண்டும். தத்து பெற்றோரின் விருப்பத்திற்கு பெரும்பாலும் பொருந்தக் கூடிய ஒரு குழந்தையை தேர்வு செய்து புகைப்படத்தை இணையதளத்தின் மூலம் அனுப்புவார்கள்.

### 27. குழந்தையைப் பார்த்த பிறகு அல்லது ஒப்புதல் செய்தபின் “வேண்டாம்” என்று சொல்ல முடியுமா?

சொல்ல முடியும். ஆனால் நியாயமான தெளிவான காரணம் இருக்க வேண்டும். இல்லை என்றால் பதிவு வரிசையில் பின்னுக்குத் தள்ளப்படுவார்கள்.

### 28. தத்து எடுக்க விரும்புவோர் குழந்தையின் புகைப்படம் கிடைத்தபிறகு அக்குழந்தையை எத்தனைமுறை நிராகரிக்கலாம்?

மூன்று முறை வாய்ப்புகள் அளிக்கப்படும்.

### 29. முதல் முறையாக குழந்தை வேண்டாம் என்று நிராகரித்த பின் அடுத்த குழந்தையின் புகைப்படம் பெறுவதற்கு எவ்வளவு நாட்கள் ஆகும்?

90 நாட்கள் இடைவெளிக்குப் பின்னரே மற்றொரு குழந்தையின் புகைப்படம் அனுப்பி வைக்கப்படும்.

### 30. ஒரே சமயத்தில் எத்தனை குழந்தைகளை பார்க்க இயலும்?

ஒரு சமயத்தில் ஒரு குழந்தையை மட்டும்தான் இணையதளத்தின் வாயிலாக பார்க்க இயலும். ஏனெனில் ஒவ்வொரு முறையும் ஒரு குழந்தையை மட்டுமே ஒத்திசைவு செய்து இணையதளம் மூலம் காண்பிக்கப்படும்.

### 31. குழந்தை குறித்த எல்லா அறிக்கையும் பெற இயலுமா?

குழந்தையின் மருத்துவ சான்றிதழ், குழந்தையின் பிறப்பு (Social Background) மற்றும் நிறுவனத்திற்கு வந்த குழந்தை சம்மந்தப்பட்ட அறிக்கைகள் (Child Study Report) அனைத்தும் காண்பிக்கப்படும்.

### 32. குழந்தையைப் பார்த்த பிறகு மருத்துவ பரிசோதனை செய்யலாமா?

நிச்சயம் செய்யலாம். தத்து பெற்றோர் குழந்தையை நேரில் சந்திக்கும் கட்டத்தில், அவர்கள் விரும்பும் மருத்துவர், குழந்தை மருத்துவ வல்லுனர் யாரையேனும் அழைத்து சென்று, மருத்துவ பரிசோதனை செய்ய அனுமதியுண்டு. அத்தகைய பரிசோதனையில், அறிவிக்கப்படாத ஏதேனும் பெரிய குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டால், அதனால் இக்குழுந்தையை தத்தெடுக்க விரும்பவில்லை என்பதை தெரிவிக்கலாம்.

இத்தகைய உரிய காரணத்துடன் குழந்தையை தத்தெடுக்க மறுக்கும் போது பதிவு வரிசையில் இருந்து தத்து பெற்றோர் பின்னுக்கு தள்ளப்பட மாட்டார்கள். விரைவில் மற்றொரு குழந்தையின் புகைப்படம் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

### 33. குழந்தையைத் தத்தெடுத்த பிறகு வீட்டிற்கு வந்து குழந்தையை பார்ப்பார்களா?

ஆமாம். 3 முதல் 5 வருடகாலம் குழந்தையின் பராமரிப்பை கண்காணிப்பார்கள். பராமரிப்பு நிறுவனம் அல்லது மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு அலகில் பணிபுரியும் சமூக பணியாளர்கள் வீட்டிற்கு வந்து குழந்தையின் வளர்ச்சியை மதிப்பீடு செய்வார்கள்.

### 34. குழந்தையைத் தத்தெடுப்பதற்கான ஆணை பெற எங்குள்ள நீதிமன்றத்திற்கு செல்ல வேண்டும்?

குழந்தையை தத்து அளிக்கும் சிறப்பு தத்தெடுப்பு முகமை எந்தப் பகுதியில் உள்ளதோ அந்த பகுதியில் அதிகாரம் உள்ள நீதிமன்றத்திற்குதான் செல்ல முடியும்.

### 35. குழந்தையைத் தத்தெடுப்பதற்கு ஏன் நீதிமன்றத்திற்கு செல்ல வேண்டும்?

சட்டப்படி குழந்தையைத் தத்தெடுப்பதால் குழந்தைக்கும், தத்து பெற்றோருக்கும் சட்ட ரீதியான பாதுகாப்பு கிடைக்கும். எதிர் காலத்தில் வரும் பிரச்சனைகளை தவிர்க்கலாம்.

### 36. குழந்தையைத் தத்தெடுக்க என்னென்ன ஆவணங்கள் தேவை?

- பான் அட்டை (Pan Card)
- பிறப்பு சான்றிதழ் (இருவருக்கும் - கணவன்/மனைவி)
- உடற்தகுதி சான்றிதழ் (மருத்துவரிடம் இருவரும் பெறவேண்டும்)
- வருமான சான்று
- பரிந்துரை கடிதம் (Recommendation letter)
- தம்பதியரின் புகைப்படம்
- விலாசத்திற்கான சான்றிதழ் (ரேஷன் கார்டு)
- வாக்காளர் அடையாள அட்டை/ஆதார் அட்டை
- பணிபுரிவதற்கான சான்று (அரசு/தனியார் நிறுவனம்/சொந்த தொழில்)

### 37. உறவினர் குழந்தையை தத்தெடுக்க இயலுமா?

தத்தெடுக்க இயலும். தத்தெடுக்க விரும்பும் நபர்கள், இந்துக்களாக இருக்கும்பட்சத்தில் “இந்து தத்தெடுப்பு மற்றும் பராமரிப்பு சட்டம் 1956” சொல்லும் விதிமுறைபடி தத்தெடுக்கலாம். இச்சட்டத்தில் எல்லாவித உறவினர்களின் குழந்தைகளை தத்தெடுக்க அனுமதி உண்டு.

- இளைஞர் நீதிச் (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015இன் கீழ் தத்தெடுக்க விரும்பினால் இச்சட்டப்பிரிவு 2(52)இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உறவு முறையில் உள்ள உறவினர் குழந்தைகளை மட்டுமே தத்தெடுக்க இயலும்.

### 38. கணவன் அல்லது மனைவி இறந்த பிறகு மறுமணம் செய்தால், முந்தைய திருமணத்தின் வாயிலாக பிறந்த குழந்தையை தத்தெடுக்கலாமா?

வாழ்க்கைத் துணை மரணமடைந்த பின் மறுமணம் செய்யும் நபரின் குழந்தைகளை, புதிததாக திருமணம் செய்த நபர் தத்தெடுக்க இயலும்.

### 39. விவாகரத்திற்கு பின் முந்தைய திருமணத்தின் வாயிலாக பிறந்த குழந்தையை மறுமணம் செய்யும் நபரால் தத்தெடுக்க முடியுமா?

விவாகரத்திற்கு பின் மறுமணம் செய்யும் நபர் முந்தைய திருமணத்தின் வாயிலாக பிறந்த குழந்தையை தத்தெடுக்க விரும்பினால், குழந்தையின் இயற்கை பெற்றோரான தாய் அல்லது தந்தையின் முழு சம்மதத்துடன்தான் தத்தெடுக்க இயலும்.

### 40. குழந்தையை தத்தெடுக்க ஆகும் செலவு என்ன?

இல்ல ஆய்விற்கு - ரூ. 6,000/-, குழந்தையின் பராமரிப்பிற்கு - ரூ. 40,000/- ஆகும். இருப்பினும் நடைமுறையில் இந்த தொகை மாறுபடலாம் (இல்ல ஆய்வு - எந்த நிறுவனத்திலிருந்து சமூக அலுவலர் வருகிறாரோ அந்த நிறுவனத்திற்கு கொடுப்பது; குழந்தைப் பராமரிப்பு - எந்த நிறுவனத்தில் குழந்தை இருக்கிறதோ அந்த நிறுவனத்திற்கு குழந்தையை இதுநாள் வரை பராமரித்ததற்கான செலவினம்).

### 41. குழந்தையிடம் அவர் தத்தெடுக்கப்பட்ட குழந்தை என்பதை தெரிவிக்க வேண்டுமா?

ஆம். குழந்தையிடம் அவர் தத்தெடுக்கப்பட்டவர் என்பதை கண்டிப்பாக தெரிவித்தலே நன்று. ஏனென்றால் அவர் வேறு யாரிடமிருந்தாவது தான் தத்தெடுக்கப்பட்டவர் என்பதை அறிந்தால் அவர் மன ரீதியாக பாதிக்கப்படுவதற்கும், நிம்மதியற்ற சூழ்நிலைக்கு தள்ளப்படுவதற்கும் வாய்ப்புண்டு.

## 42. குழந்தையிடம் அவர் தத்தெடுக்கப்பட்ட குழந்தை என்பதனை எப்பொழுது, எவ்வாறு கூற வேண்டும்?

சிறுவயதிலேயே (எட்டு வயதிற்கு முன்பாகவே) அவர் தத்தெடுக்கப்பட்டவர் என்பதனை கூற வேண்டும். மிக எளிமையாகவும், நேர்மையாகவும் அவர் வயதிற்கேற்ப பேச வேண்டும். இதற்கென பெற்றோர்களுக்கான சிறிய கையேடு உள்ளன.

## 43. குழந்தைகளிடம் தத்தெடுத்தலை குறித்து விளக்கும்போது என்ன என்ன கருத்துக்களை மனதில் கொள்ளவேண்டும்?

- இயற்கையாகவே குழந்தைகள் தங்களை பற்றி அறிய ஆவலுடன் இருப்பார்கள். எனவே இதை குறித்து பேசும்பொழுது மனமகிழ்ச்சியோடு எப்படி எங்கிருந்து தத்தெடுத்தார்கள் என்பதை விளக்க வேண்டும்.
- குழந்தையிடம் உறுதியாகவும், நம்பிக்கையோடும் பேச வேண்டும். தத்தெடுத்த பெற்றோர்கள் குழந்தையை வீட்டிற்கு அழைத்து வந்த நாள் அன்று எடுக்கப்பட்ட புகைப்படங்களை குழந்தையுடன் பகிர்ந்துக்கொள்ளலாம்.
- தத்தெடுத்தல் பற்றி பேசும் பொழுது அவர்கள் சரிவர புரிந்துக்கொள்ளவில்லை என்று தெரியவரும்பொழுது உடனடியாக அதை மாற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

## 44. குழந்தையிடம் தத்தெடுத்தல் குறித்து பேசும் பொழுது பின்பற்ற வேண்டியவை யாது?

- குழந்தையிடம் தத்தெடுத்தலைப் பற்றி முறைப்படுத்தி அவ்வப்போது பேச வேண்டும்.
- தத்தெடுத்த பெற்றோர் தத்தெடுத்த குழந்தையின் தேவை மற்றும் திறமையை அறிந்து சிறப்பான கவனம் செலுத்த வேண்டும்.
- குழந்தையிடம் பேசும் பொழுது அக்குழந்தையின் இயற்கைப் பெற்றோரைப் தாழ்த்தியோ, அல்லது இழிவுப்படுத்தியோ பேசக்கூடாது.
- அத்தகைய இயற்கை பெற்றோர் குழந்தையின் சீரிய நன்மையை மனதில் கொண்டே தத்து கொடுக்க முடிவு எடுத்திருப்பார் என்பதை உணர்த்த வேண்டும்.
- அக்குழந்தையை தத்தெடுத்ததின் மூலம், தங்களுக்கு எத்தகைய மகிழ்ச்சி வந்தடைந்திருக்கிறது என்பதனை உணர்த்த வேண்டும்.
- தத்தெடுத்தக் குழந்தை கேள்வி கேட்கும் வரை காத்திருக்க வேண்டாம். சரியான தருணத்தில் நீங்களாகவே கூறி விடலாம்.
- தத்தெடுத்த பெற்றோர் அக்குழந்தையிடம் நாங்கள் தத்தெடுத்ததால் நீ அதிர்ஷ்டசாலி, இதுப்போன்ற வார்த்தகளை கூற வேண்டாம்.

## 45. தத்தெடுத்தல் அக்குழந்தைக்கு நன்மையானதா?

தத்தெடுத்தல் உறுதியாக, சம்பந்தப்பட்ட அனைவருக்கும் நன்மை தரும். தத்தெடுத்தலில் சம்பந்தப்பட்ட அனைவரின் பிரச்சனையான சூழ்நிலைக்கு ஏற்ற நல்ல முடிவாகவும் இருக்கும்.

## 46. தத்தெடுத்த குழந்தை மகிழ்ச்சியாக இருக்குமா?

தத்தெடுத்த குழந்தை மற்ற குழந்தைகள் போலவே ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாக இருக்க எல்லா வாய்ப்புகளும் உள்ளன.

## 47. சட்டரீதியாக தத்தெடுத்தபின் முடிவை மாற்றலாமா?

கண்டிப்பாக மாற்ற இயலாது.

48. சட்டரீதியாக தத்தெடுக்கும் முறையில் தத்து ஆய்வு (Scrutiny for Adoption) என்றால் என்ன?

ஒருவர் ஒரு குழந்தையைத் தத்தெடுக்க விரும்பினால் இறுதி கட்டமாக நீதிமன்றத்தின் ஒப்புதல் ஆணை பெறுதல் வெண்டும். நீதிமன்றம் விண்ணப்பித்த அனைத்து ஆவணங்களையும் பரிசீலித்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திற்கு ஆணையிடும். இந்த ஆணையை ஏற்று அந்த நிறுவனம் ஆவணங்களை ஆராய்ந்து தேவைப்படின் பெற்றோர்களையும் தொடர்புகொண்டு உண்மையிலேயே தத்தெடுப்பு குழந்தையின் நலனிற்கு சிறந்தது என்று நீதிமன்றத்திற்கு பரிந்துரைக்கப்படும். அவ்வாறில்லாமல் ஆவணங்களில் முரண்பாடு இருந்தால் அதையும் அந்த நிறுவனம் நீதிமன்றத்திற்கு தெரிவிக்க வேண்டும். இது உச்ச நீதிமன்றத்தால் பரிந்துரைக்கப்பட்ட ஒரு நடைமுறையாகும்.

49. தத்து ஆய்வை (Scrutiny for Adoption) எந்த நிறுவனம் செய்யும்?

நம் தமிழ்நாட்டை பொறுத்தவரை “இந்திய குழந்தைகள் நலச்சங்கம் - தமிழ்நாடு” மற்றும் “இந்திய சமூக நலச்சங்கம்” ஆகிய இரு நிறுவனங்களும், உயர்நீதிமன்றத்தால் இத்தகைய “தத்து ஆய்வு அறிக்கை” சமர்ப்பிக்க அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## முடிவாக...

தத்தெடுத்தல் ஒரு உணர்வுபூர்வமான முறையாகும். இது அனைவருக்கும் ஒரு நன்மை பயக்கும் முறையாகும். பெற்றோரை பொருத்தவரை முக்கியமாக குழந்தையின்மை என்னும் சூழ்நிலையால் மனவருத்தத்தில் உள்ளவர்களுக்கு இது ஒரு சிறந்த வடிகாலாக அமையும். இயற்கை பெற்றோரை பிரிந்து வாழும் ஒரு குழந்தைக்கு அன்பும், அரவணைப்பும் நிறைந்த ஒரு மாற்று குடும்பத்தில் சட்டரீதியான அங்கத்தினராக போய்சேர்வது என்பது அக்குழந்தையின் சீரிய நன்மைக்கு உகந்த செயலாக அமையும் என்பதில் மாற்று கருத்து ஏதும் இல்லை. தத்தெடுக்க வேண்டும் என்று முடிவு செய்தபிறகு, தத்தெடுப்பதற்காக பல அதிகாரிகளை சந்திக்கும் பொழுதும், குழந்தையை வீட்டிற்கு கொண்டுவந்து பராமரிக்கும் பொழுதும், பெற்றோர்களிடம் மனஉளைச்சல்கள் ஏற்படலாம். எனவே எல்லா கட்டங்களிலும் தகுந்த ஆலோசனையை மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு அலகில் உள்ள ஆலோசகரிடம் அல்லது மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு அலுவலரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம். தேவை ஏற்படின் முறையான பயிற்சி பெற்ற உளவியல் நிபுணர்களிடமிருந்தோ அல்லது மனநல மருத்துவரிடமிருந்தோ ஆலோசனை பெறலாம். குறிப்பாக குழந்தையிடமோ அல்லது பெற்றோர்களிடமோ ஏதேனும் மனஉளைச்சல் இருப்பின் தகுதிவாய்ந்த நபர்களிடம் தங்களுடைய மனஉளைச்சலை பகிர்ந்துக்கொள்ளுதல் சிறப்பானது. இதன் அடிப்படையில்தான் தத்தெடுத்த பெற்றோர்களை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என்ற கருத்து உருவாகியது. தத்தெடுத்த பெற்றோரின் கூட்டமைப்பு ஏற்படின் அது பெற்றோர்களின் கவலைகளையும், குழந்தைகள் பிரச்சனைகளை பற்றியும், ஒருவருக்கொருவர் பகிர்ந்துக்கொள்வதற்கான ஏற்ற அமைப்பாக இருக்கும். மேலும் இப்பிரச்சனைகளை மற்றவர்கள் எவ்வாறு கையாண்டார்கள் என தெரிவது அவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக அமையும்.

**நீதிமன்றத்தில் வழக்குபதிவு செய்து குழந்தையை சட்டப்படி தத்தெடுத்தலே சிறந்தது. இது பெற்றோருக்கும் குழந்தைக்கும் பாதுகாப்பானது.**

*அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு*
*என்போடு இயைந்த தொடர்பு*

*- திருக்குறள் எண் 73*

*பொருள்: அருமையான உயிர்க்கு உம்போடு பொருந்தியிருக்கம் உறவு, அன்போடு பொருந்தி வாழும் வாழ்க்கையின் பயனே என்று அறிஞர் கூறுவர்.*

## குழந்தையைத் தத்தெடுத்தல் முறை - விளக்கப்படம்

